**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S No. 160 of 2023

Deposition of P.W. 1

Name of the Witness: திருமதி.சர்மிளா

Date : 25.03.2026

**குறுக்கு விசாரணை**

நான் பாகபிரிவினை கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். 1ம் பிரதிவாதி என்னுடைய அக்கா. 2ம் பிரதிவாதி என்னுடைய அம்மா. நான் B.A. English படித்துள்ளேன். நான் 2000ம் வருடம் அமெரிக்கா போனேன். நான் அமெரிக்காவில் நிரந்தர குடியிரும்மை பெற்று அங்கேயே வசித்து வருகிறேன். நான் 2 வருடத்திற்கு ஒரு முறை இந்தியா வருவேன். என்னுடைய அப்பா E.B யில் வேலை செய்தார். என் அப்பாவிற்கும், அம்மாவிற்கும் 1970ல் திருமணமானது. என் அப்பாவின் பூர்வீகம் கம்பைநல்லூர். என் அம்மாவின் பூர்வீகம் தருமபுரி மாவட்டம், ராமியனஅள்ளி கிராமம்.

2) என் அம்மாவின் அப்பா அந்த காலத்தில் வருவாய் துறையில் முன்சீப்பாக இருந்தார் என்றால் சரிதான். அவருக்கு எவ்வளவு சொத்துக்கள் இருந்தது என்று எனக்கு தெரியாது. சொத்துக்கள் இருந்த விவரம் தெரியும், ஆனால் எவ்வளவு சொத்துக்கள் இருந்தது என்று தெரியாது. என் அம்மாவின் அப்பா கந்தசாமிக்கு ராமியனஅள்ளி கிராமத்தில் 50, 60 ஏக்கர் நிலம் சொந்தம் என்றால் இருக்கலாம், எனக்கு தெரியாது.

3) தாவா சொத்தின் சர்வே எண், அளவு, செக்குபந்தி எனக்கு தெரியாது, தருமபுரி டவுன் பாரதிபுரத்திலும், இன்னொரு சொத்து செந்தில்நகரிலும் உள்ளது. பாரதிபுரத்தில் உள்ள சொத்தை என் அப்பா 1978ல் என் அம்மா பெயரில் வாங்கினார். அப்போது நான் 3 வயது குழந்தை அதனால் எப்போது, யாரிடம், எவ்வளவு ரூபாய்க்கு கிரையம் வாங்கினார் என்று தெரியாது, என் அப்பா தான் அவர் பணத்தை கொண்டு அம்மா பெயரில் வாங்கினார் என்று எதுவும் தெரியாமல் பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் அம்மா தாவா சொத்துக்கள் இரண்டுமே அவர் பெற்றோர்கள் கொடுத்த பணத்தில் வாங்கினார் என்றால் சரியல்ல. ஒரு சொத்து என் அம்மா பெயரிலும், இன்னொரு சொத்து அப்பா பெயரிலும் உள்ளது.

4) தாவா 2ம் இன சொத்தை என் அம்மா தான் அவர் பெயரில் கிரையம் வாங்கி என் அப்பா பெயரில் தான செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தார் என்றால் தற்போது தான் இந்த வழக்கு போடும் போது எனக்கு தெரிய வந்தது. இந்த விவரத்தை நான் தாவாவிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை.

5) தாவா 2ம் இன சொத்தை என் அம்மா 1977ல் கிரையம் வாங்கி என் அப்பா பெயரில் 1981ல் தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்தார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியவில்லை. நான் தற்போது தான் வா.சா.ஆ.8 செட்டில்மெண்ட் பத்திரத்தை கண்டுபிடித்து என்னுடைய பிரமாண வாக்குமூலத்திலும் தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.8 செட்டில்மெண்ட் பத்திரத்தில் தாவா சொத்து என் அம்மாவிற்கு தான் சொந்தம் என்று

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. வழக்கு விவரங்களை நான் தான் சொன்னேன்.

6) தாவா 2ம் இன சொத்தை வாங்கும் போது எனக்கு 2 வயது என்பதால் யாருடைய பெயரில் சொத்து வாங்கப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. தாவா 1ம் இன சொத்திற்கான கிரைய பத்திரம் என் அம்மா பெயரில் உள்ளது. தாவா சொத்துக்கள் இரண்டுமே என் அம்மாவின் தனிப்பட்ட பாத்தியம் என்றாலும், அதில் என் அப்பாவிற்கு எந்தவிதமான பாத்தியமும் இல்லை என்றால் சரியல்ல.

7) என் அப்பா 29.06.2010ல் இறந்தார். நான் என் தாவாவிலும், பிரமாண வாக்குமூலத்திலும் என் அப்பா இறந்த தேதி 29.07.2010 என குறிப்பிட்டுள்ளேன் என்றால் அது தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. என் அப்பாவின் இறப்பு தேதி, சொத்து விவரம் எதுவும் தெரியாமல் பிரதிவாதிகளிடமிருந்து சொத்துக்களை அபகரிக்க வேண்டி இந்த வழக்கை பொய்யாக போட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

8) தாவா 1ம் இன சொத்தை என் அம்மா 1ம் பிரதிவாதி பெயரில் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி வைத்துள்ள விவரம் எனக்கு தெரியும். செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்த தேதியிலிருந்து 1ம் பிரதிவாதி ீடயல ளூஉாடிடிட வைத்து அனுபவித்து வருகிறார் என்றால் சரிதான். இந்த சொத்திற்கான பட்டா, சொத்துவரி எல்லாம் 1ம் பிரதிவாதி பெயரில் மாறியுள்ளது என்றால் சரியல்ல.

9) இந்த சொத்து என் அம்மாவின் தனிப்பட்ட சொத்து என்பதால் என் அம்மா 1ம் பிரதிவாதி பெயரில் எழுதி கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரம்

சட்டபடி செல்லும் என்றால் சரியல்ல. தாவா 1ம் இன சொத்து என் அம்மாவின் தனிப்பட்ட சொத்து என்பதால் என் அம்மா உயிருடன் இருக்கும் போது நான் சொத்தில் இந்து வாரிசுரிமை சட்டப்படி சொத்தில் பாகம் கேட்க உரிமையில்லை என்றால் சரியல்ல.

10) இந்த வழக்கில் நான் பொது அதிகார முகவர் வின்சென்ட்டை எனது வழக்கறிஞர் மூலமாக எனக்கு தெரியும். வின்சென்ட் சென்னையை சேர்ந்தவர். வின்சென்ட்டுக்கு வழக்கு விவரங்களை பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் சம்பந்தமாக எனக்காக வழக்கு நடத்த வேண்டும் என்பதற்காக வின்செட்டிற்கு நான் பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்துள்ளேன். என் அம்மா என் அக்காவிற்கு எழுதி கொடுத்த 24.12.2021 செட்டில்மெண்ட் பத்திரம் செல்லாது என்று பரிகாரம் கேட்டுள்ளேன். இந்த ஆவணம் எழுதி கொடுத்த இரண்டு மாதத்தில் என் அம்மா 15.02.2022ல் இணை ஆவணம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. அந்த இணை ஆவணம் என் அம்மா எழுதி கொடுத்ததாக எழுதி சொல்லியிருந்தால் அது தவறு. 15.02.2022ல் இணை ஆவணம் செல்லாது என்று பரிகாரம் கேட்டுள்ளேனா என்று தெரியாது. அந்த ஆவணத்தை பற்றி எந்த பரிகாரமும் கேட்காததால் இந்த வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

11) நான் வழக்கு போட்ட பிறகு தான் என் அக்கா 1ம் பிரதிவாதி தாவா சொத்தில் ஸ்கூல் கட்ட ஆரம்பித்தார் என்றால் சரிதான். நான் இந்த வழக்கை செப்டம்பர் 2022ல் தாக்கல் செய்தேன். ஸ்கூல் எப்போது கட்ட ஆரம்பித்தார்கள் என்று தெரியாது. நான் இந்த வழக்கை காட்டி என் பொது

அதிகார முகவர் மூலமாக அவர்கள் அந்த சொத்தில் ஸ்கூல் கட்ட கூடாது என்று தடை செய்தேன் என்றால் சரியல்ல. இது சம்பந்தமாக என் அக்கா வின்சென்ட் மீது புகார் கொடுத்த விவரம் எனக்கு தெரியும். அந்த புகார் மீது போலிசார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதால் தான் அவர் பெயரில் உள்ள தாவா 1ம் இன சொத்து அவருக்கு சொந்தமானது என்று அசல் வழக்கு எண் 40/2024 என்ற வழக்கு போட்டுள்ளார் என்றால் சரிதான். என் அக்கா வழக்கு போட்டுள்ளார்.

12) என் அம்மா அவருடைய தனிப்பட்ட சொத்தை தாவா 1ம் இன சொத்தை என் அக்காவிற்கு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்து விட்டதால் 1ம் இன சொத்தை பொறுத்து எந்த பாகமும் கேட்கமுடியாது என்றால் சரியல்ல. தாவா 2ம் இன சொதது என்பதால் 2ம் இன சொத்தை பொறுத்து எந்த பாகமும் கேட்கமுடியாது என்றால் சரியல்ல. என் அப்பா தான் தாவா சொத்துக்களை பணம் கொடுத்து வாங்கினார் என்பதற்கு நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. நான் எந்தவித ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்பதால் என் அப்பாவின் சொத்து என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல.

13) நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண் 160/2023 வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றாலும், 1ம் பிரதிவாதி போட்டுள்ள அசல் வழக்கு எண் 40/2024 வழக்கு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/Tmt.U.Monica, M.L.,
Additonal District Judge,
Dharmapuri.